கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 30.04.2020

# 30.04.2020ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

**01)** இந்நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள், கேஸ், பால், இலை, அரிசி மற்றும் பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கு செலவினம் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.50.00 லட்சத்திற்கும் அதற்கான விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.007011 /2019 / அ6**

---

**02)** கும்பகோணம் நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கும், இடமாற்றம் பயணப்படி செலவினத்திற்கும், பயணப்பட்டியல் தொகை வழங்குவதற்காக 2020–21ம் ஆண்டுக்கு தோராயமாக ரூ.4.00 லட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.434 /2012 / பி3**

---

**03)** கும்பகோணம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2020–இல் நடைபெற அதற்கான முன் ஏற்பாடுகள் 2019–ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மேற்படி உள்ளாட்சி தேர்தல் நடைபெற வாக்குச்சாவடி பட்டியல் வாக்குச்சாவடி மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கு தேவையான பட்டியல், ஜெராக்ஸ் நகல் எடுக்கவும், புத்தகவடிவில் தயார் செய்யவும், மேலும் நகராட்சியில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரம் அடிக்கடிப பழுது ஏற்படுவதால் தேர்தல் பணி பாதிக்கப்படும் என்பதால் இரண்டு நகல் எடுக்கும் இயந்திரம் தரமணி பெண்கள் கூட்டுறவு அச்சகம், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி அறிவிப்பில் கண்டுள்ள தொகைக்கு வாங்கி பயன்படுத்தி கொள்ளவும், தேர்தல் தொடர்பான இதர செலவினத்திற்காக உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் மாருதி சிஸ்டம்ஸ், திருச்சி அவர்களால் சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2019–க்கு 100 நகல்கள் வாக்காளர் பட்டியல் அச்சிட்ட வகையில் ரூ.1,84,691/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதற்கான தொகை வழங்க அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 824 / 2020 / சி4**

---

**04)** கும்பகோணம் நகராட்சி சாலைகளில் பல்வேறு இடங்களில் பதிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மேன் ஹோல் மூடிகள் பழுதடைந்தும், சாலை மட்டத்தைவிட தாழ்ந்தும் உள்ளது. இதனால் மேன் ஹோல்களை கடந்து செல்லும் வாகனங்களுக்கு சீரான போக்குவரத்து செல்ல இயலாமல் சிரமப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், மேன் ஹோல் மூடிகள் தாழ்ந்துள்ளதால் அதன் மீது சேகரமாகும் மண் சேறு சகதிகள் மழைக்காலங்களில் இறங்கி கழிவு நீர் வாய்க்கால் செல்லும் ஓட்டத்தினை தடுக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, பாதாள சாக்கடை மேன் ஹோல்களை பழுது பார்த்து மூடிகள் மாற்றும் பணிக்கு மதிப்பீடு ரூ.10.50 இலட்சத்துக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் 4099 /2020/இ2

---

**05)** கும்பகோணம் நகராட்சி வார்டு எண் **1** முதல் **6**க்கு உட்பட்ட சுவாமிமலை மற்றும் பெருமாண்டி பிரதான சாலையில் மேலக்கொட்டையூர் முதல் பாலக்கரை, பாலக்கரை முதல் கருப்பூர் சாலை வழியாக சோழன் நகர் பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் வரையுள்ள சாலைகளில் பதிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மேன் ஹோல் மூடிகள் பழுதடைந்தும், சாலை மட்டத்தைவிட தாழ்ந்தும் உள்ளது. இதனால் மேன் ஹோல்களை கடந்து செல்லும் வாகனங்களுக்கு சீரான போக்குவரத்து செல்ல இயலாமல் சிரமப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேற்குறிப்பிட்ட சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் சாலையாகும். இச்சாலைகள் அத்துறையினரால் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகையில், நகராட்சியின் பாதாள சாக்கடை மேன் ஹோல்கள் சாலை மட்டத்திற்கு உயர்த்தப்படாமல் மூடியின் மீதும் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட சாலைகளில் உள்ள பாதாள சாக்கடை மேன் ஹோல்களை பழுது பார்த்து சாலை மட்டத்திற்கு உயர்த்தி மூடிகள் மாற்றும் பணிக்கு மதிப்பீடு ரூ.**9.60** இலட்சத்துக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் 4099 /2020/இ2

---

**06)** கும்பகோணம் நகராட்சி பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீர் பிரதானக் குழாய்கள் மற்றும் கரிக்குளம் பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் பம்பிங் பிரதானக் குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் உடனடியாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு ரூ.**13.00** இலட்சத்துக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் 4674/2020/இ2

---

**07)** கும்பகோணம் நகராட்சி - நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வார்டு எண். 5 பெருமாண்டி பட்டக்கால் தெருவில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடம் பழுது பார்க்கும் ரூ.4,00,000/— மதிப்பீட்டிலான பணிக்கு 03.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்தகாரர் பெயர் | சதவீத விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஸ்ரீராம் பில்டர்ஸ்,<br>அண்ணலக்ரஹாரம்,<br>கும்பகோணம் | மதிப்பீட்டை விட 0.27 % குறைவு |
| 2. | திருவாளர்கள் ஐடியல் இஞ்சினியரிங்,<br>அம்மாசத்திரம். | மதிப்பீட்டை விட 2.96 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைவிட 0.27% குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் ஸ்ரீராம் பில்டர்ஸ், அண்ணலக்ரஹாரம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 3467 /2020/இ2**
**ம.எண். 85 /2019–20**

---

**08)** கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் சாலையிலிருந்து பாலம் வழியாக நீரேற்று நிலையம் செல்லும் சாலையானது, சாலையிலிருந்து பாலம் முகப்பு வரை மிகவும் பள்ளமாக உள்ளதால் மோட்டார் மற்றும் பம்புகள் பழுதுபடும்போது அவற்றை அவ்வழியே எடுத்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அப்பகுதியில் மழை நேரங்களில் தண்ணீர் தேங்கி பாதையில் செல்ல முடியாமல் இருப்பதால் அப்பகுதியில் சாலை முதல் பாலம் முகப்பு வரை தடுப்புச் சுவர் எழுப்பி சிமெண்ட் தளம் ரூ.**12.50** இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் **4656/2020/இ2**

---

**09)** கும்பகோணம் நகராட்சி - நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வார்டு எண். 21 பாணாதுறை கழிவு நீர் உந்து நிலையத்திற்கு செல்லும் தார் சாலை பகுதியில் தடுப்பு சுவர் பணி மற்றும் சிறுபாலத்திற்கு கைப்பிடி சுவர் அமைக்கும் ரூ.15,00,000/– மதிப்பீட்டிலான பணிக்கு 16.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வ.எண் | ஒப்பந்தகாரார் பெயர் | சதவீத விபரம் |
|---|---|---|
| 1 | திரு.என்.சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.10 % குறைவு |
| 2. | திருவாளர்கள் ஏ.பி. பில்டர்ஸ், கும்பகோணம் | மதிப்பீட்டை விட 2.01 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைவிட 0.10% குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.என்.சரவணன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 3884 /2020/இ2**
**ம.எண். 89 /2019–20**

---

**10)** கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 44 ஆணைக்காரன்பாளையம் பகுதி வீடுகளில் இருந்து பாதாள சாக்கடை மூலம் கழிவுநீர் நாச்சியார்கோவில் வழிநடப்பு பிரதான கழிவு நீர்க் குழாய் மூலம் சீனிவாசன் நகர் பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசனுக்கு சென்றடைகிறது. இதில் ஆணைக்காரன்பாளையம், தெற்கு வள்ளுவர் தெரு சாலைகளில் இருந்து வரும் கழிவுநீர் பாதைகளின் End Manhole நாச்சியார் கோவில் வழிநடப்பு சாலை சந்திப்பில் உள்ள பிரதான கழிவு நீர்க் குழாய் வழித்தடத்தில் உள்ள Manhole-ஐ விட 0.75 மீட்டர் தாழ்ந்த நிலையில் உள்ளதால், கழிவு நீர் தேங்கி நின்று செல்ல வேண்டியுள்ளது. மேற்கூறிய பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் மற்றும் மேன் ஹோல்களில் மண் மற்றும் சேறு சகதிகள் தேங்கி அடைப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, மேற்குறிப்பிட்ட சந்திப்பில் உள்ள மேன் ஹோலில் 3 எச்.பி. மின் மோட்டார் பொருத்தி கழிவு நீரை இறைத்து அகற்ற மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண்4616 /2020/இ2

---

**11)** கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 43 காளியாப்பிள்ளை தெருவில், மாதுளம்பேட்டை பம்பிங் ஸ்டேசன் Suction Wellல் உள் நுழைவதற்கு முன்புறமுள்ள 5.50 மீட்டர் ஆழமுள்ள ஆளிறங்கும் மேன் ஹோல், அத்தெருவில் பூமியின் கீழ் உள்ள மிகுந்த ஈரத்தன்மையுள்ள களிமண் கலந்த மண்ணின் தன்மை காரணமாக உள் வாங்கி, பதிக்கப்பட்ட நிலையில் இருந்து தாழ்ந்து, கழிவு நீர் போக்கு முழுவதும் தடைபட்டு விட்டது. இதனால், வார்டு எண் 39, 40, 41 மற்றும் 43 ஆகிய வார்டுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் பம்பிங் ஸ்டேசன் சென்றடைவதில் தேக்கம் ஏற்பட்டு செல்கிறது. எனவே மேற்கூறிய பகுதிகளின் சுகாதார நலன் கருதி ஒத்தைகடைத் தெருவில் உள்ள மேன் ஹோலில் 7.5 எச்.பி. மின் மோட்டார் பொருத்தி மாதுளம்பேட்டை பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் Suction Well–க்கு கழிவு நீரை இறைத்து அகற்ற மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் 4043/2020/இ2

---

**12)** கும்பகோணம் நகராட்சி உரக்கிடங்கில் பெண்கள் மற்றும் குழந்தைகளால் பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத வண்ணம் எரிக்க புதிய Incinerator Machine விநியோகித்து பொருத்தி தரும் பணி மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 487 நாள் 30.09.2019ல் நிர்வாக அனுமதி பெற்று 11.10.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளிதாரர் திரு.என்.சரவணன் ஒப்பந்ததாரருக்கு நகர் மன்ற தீர்மான எண் 523 நாள் 29.10.2019ல் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரரால் புதிய Incinerator Machine விநியோகித்து பொருத்தப்படும்பொழுது அத்தியாவசியமாக தேவைப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் பிளாட்பார்ம் மற்றும் Galvalium Sheetனால் கூரை மற்றும் பக்கவாட்டு அடைப்புகள் அமைத்தல், Voltage Stabilizer மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் ஆகிய கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் இப்பணிக்கான செலவுத் தொகை ரூ.3,33,100/- ஆகியுள்ளது. இக்கூடுதல் செலவினம் ரூ.83,100/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. இப்பணிக்கு ரூ.3,33,100/-க்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

2. கூடுதல் செலவினம் ரூ.83,100/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

3. சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இக்கருவி விநியோகம் செய்த ஒப்பந்ததாரரைக் கொண்டே கூடுதல் பணிகளை மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 4284 /2018/இ2**
**ம.எண். 50 /2019–20**

---

**13)** கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 43 காளியாப்பிள்ளை தெருவில் LBS சாலையில் இருந்து மாதுளம்பேட்டை பம்பிங் ஸ்டேசன் வரையுள்ள 4.50 மீட்டர் முதல் 5.50 மீட்டர் வரை ஆழமுள்ள 9 மேன் ஹோல்கள், அத்தெருவில் பூமியின் கீழ் உள்ள மிகுந்த ஈரத்தன்மையுள்ள களிமண் கலந்த மண்ணின் தன்மை காரணமாக உள் வாங்கி, பதிக்கப்பட்ட நிலையில் இருந்து தாழ்ந்து, கழிவுநீர் போக்கு முழுவதும் தடைபட்டு விட்டது. இதனால் வார்டு எண்.26, 37, 40, 42 மற்றும் 43 ஆகிய வார்டுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் பம்பிங் ஸ்டேசன் சென்றடைவதில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய பகுதிகளின் சுகாதார நலன் கருதி காளியாப்பிள்ளை தெருவில் உள்ள மேன் ஹோலில் 7.5 எச்.பி மின் மோட்டார் பொருத்தி கழிவு நீரை இறைத்து அகற்ற மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

ந.க. எண் 4043/2020/இ2

---

**14)** கும்பகோணம் நகராட்சி - நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வார்டு எண். 24 பாரத் நகரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ. 9,50,000/–க்கு 21.04.2020–ம் தேதியன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் திருவாளர்கள் | சதவீத விபரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீராம் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.22 % குறைவு |
| 2. | திரு.ஜே.சம்பத், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.27 % அதிகம் |

அலுவலக குறிப்பு: 1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைவிட 0.22% குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். ஸ்ரீராம் பில்டர்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. திடக்கழிவு மேலாண்மையில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் செயல்பாட்டிற்கு அடிப்படை தண்ணீர் மற்றும் மின் வசதிகள் உடனடியாக செய்து தரப்பட வேண்டியதன் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 4284 /2018/இ2**
**ம.க.எண். 90 /2019–20**

**15)** கும்பகோணம் நகராட்சி - நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வார்டு எண். 7 டாக்டர் மூர்த்தி சாலை நகராட்சி அலுவலக வளாகத்தினுள் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ. 9,00,000/–க்கு 22.04.2020–ம் தேதியன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | சதவீத விபரம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அசோக்குமார், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.18 % குறைவு |
| 2. | திரு.ஜே.சம்பத், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.04 % குறைவு |

அலுவலக குறிப்பு:

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைவிட 0.18% குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அசோக்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மையில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் செயல்பாட்டிற்கு அடிப்படை தண்ணீர் மற்றும் மின் வசதிகள் உடனடியாக செய்து தரப்பட வேண்டியதன் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 4284 /2018/இ2**
**ம.க.எண். 91 /2019–20**

---

**16)** வார்டு எண் 40 டாக்டர் தியாகராஜன் பூங்காவில் இரு எண்ணிக்கைகள் குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்கும் மையம் அமைத்தல், மற்றும் மணிகூண்டு முன்புறம் பேவர் பிளாக் தளம் அமைக்கும் ரூ.400000/–மதிப்பீட்டிலான பணிக்கு **14.06.2019** அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு மன்றம் தனது **30.8.2019–ம்** தேதிய தீர்மான எண்.**442** –ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த என்.சரவணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட மன்றப் பொருள் தயார் செய்யும்பொழுது தவறுதலாக வார்டு எண் 44 கம்பன் நகர் பகுதி நகராட்சி சுகாதார வளாகத்தில் உள்ள கழிப்பிடம் மற்றும் குளியலறைகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் குறிப்பிடப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்தவறு தற்பொழுது கண்டறியப்பட்டு திருத்திய மன்றப் பொருள் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. வார்டு எண் 40 டாக்டர் தியாகராஜன் பூங்காவில் இரு எண்ணிக்கைகள் குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்கும் மையம் அமைத்தல், மற்றும் மணிகூண்டு முன்புறம் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணியினை **ரூ.4,00,000/–மதிப்பீட்டில்** மேற்கொள்ள நகர் மன்றம் தனது **28.02.2019ம்** தேதிய தீர்மானம் எண் **295ல்** அனுமதி வழங்கியதன் பேரில் இப்பணிக்கு **14.06.2019** அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கும், **30.8.2019–ம்** தேதிய நகர் மன்றத் தீர்மான எண். **442** –ஐ ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| **1** | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம் | **356989.00** | **356784.18** | மதிப்பீட்டை விட **0.05** சதவிகிதம் குறைவு |
| **2.** | ஐடியல் எஞ்சினியரிங் ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம், கும்பகோணம் | **356989.00** | **353139.31** | மதிப்பீட்டை விட **1.08** சதவிகிதம் குறைவு |

**அலுவலக குறிப்பு:**

1) நகர் மன்ற தீர்மானம் எண்.442 நாள் 30.8.2019–ஐ ரத்து செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்றதில் குறைவானதும், மதிப்பீட்டைவிட 1.08 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள ஐடியல் எஞ்சினியரிங், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5644/2019/இ2**
**ம.எண்.32/2018–19**

---

**17)** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை மேற்பார்வையிட தொழிட்நுட்ப உதவியாளர் ஒருவரை Outsourcing முறையில் அனுப்ப 16.04.2020–ம் தேதியன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்தகாரர் பெயர் | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | ஐடியல் இஞ்ஜினியரிங்,<br>எழில் நகர், தேப்பெருமாநல்லூர், அம்மாசத்திரம், | மதிப்பீட்டு வீதம் |
| 2 | ஸ்ரீ ராம் பில்டர்ஸ்,<br>51–A, காளிமுத்து நகர், கும்பகோணம். | மதிப்பீட்டை விட 0.31 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு** :

1. மதிப்பீட்டு வீதம் கொடுத்துள்ள திருவாளர். ஐடியல் இஞ்ஜினியரிங், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 16124/2014/E1**

---

**18)** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தேப்பெருமாநல்லூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தவேண்டிய இசைவாணை கட்டணம் 2020–2021 ஆம் ஆண்டு வரை கீழ்கண்டவாறு செலுத்த தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் Letter No.F.TNJ0012/RM/DEE/TNPCB/TNJ/2020 நாள்.17.03.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Fees | Act | Arrears upto 31.03.2020 | Current year demand 2020-21 | Total Amount | Already paid | Balance to be paid |
|---|---|---|---|---|---|---|
| Consent Fees | Air Act | 5003 | 86625 | 183256 | 0 | 183256 |
| | Water Act | 5003 | 86625 | | | |

அதன்படி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இசைவாணைக் கட்டணம் ரூ.1,83,256/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 8741 / 97 / E4**

---

**19)** இந்நகராட்சி பகுதியில் கொரானா வைரஸ் நோய் தொற்று (COVID-19) பரவுவது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, கடிதங்களின் வாயிலாக தேவையான கிருமி நாசினி பொருட்கள், தளவாட சாமான்கள், பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவை தேவையான இருப்பு வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்ய ஏற்கனவே செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. செலவினம் மிகையாக ஏற்பட்டுள்ளதால் ரூ.59.00 இலட்சம் SDRF நிதி பெறப்பட்டுள்ளது. எனவே திருத்திய நிர்வாக அனுமதிக்காக செலவினம் ரூ.55.00 லட்சம் மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.1845 /2020 / எச்1**

---

**20)** இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று (COVID-19) தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் முழு உடற்கவசம் (PPE) விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | யுனிக் சொல்யூசன்ஸ்<br>4/41, பிருந்தாவன், 3வது தெரு<br>அய்யர் பங்களா, மதுரை.14 | 1400/– |
| 2 | மதுரா டெக்ஸ்<br>5.காமராஜ் நகர் 3வது தெரு<br>சின்ன சொக்கிகுளம், மதுரை.2 | 1200/– |
| 3 | ட்டிரீம் இன்ஃரா<br>19,பெரைரா தெரு, தூத்துக்குடி.1 | 1000/– |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள ட்டிரீம் இன்ஃா, 19.பெரைரா தெரு, தூத்துக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3607 / 2020 / எச்1**

---

**21)** இந்நகராட்சி பகுதியில் கொரோனா (COVID-19) வைரஸ் தொற்று பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான கிருமிநாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் பொருட்கள் அரசு அங்கீகரிக்கப்பட்ட சிட்கோ (TANSIDCO) நிறுவனத்தின் மூலம், நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தில் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அ. அனுமதி அளிக்கலாம்.
ஆ. தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.
இ. உத்தேச செலவினம் ரூ.10 லட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.1845 / 2020 / எச்1**

---

**22)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொடர்பாக கணக்கெடுப்பு படிவம் அச்சடித்துதர விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீகலாநிதி பிரஸ்<br>லித்தோ பிளக்ஸ் &ஆப்செட்<br>1.கும்பேஸ்வரர் திருமஞ்சனவீதி, கும்பகோணம் | 17000/– |
| 2 | ராஜன் பிரஸ்<br>39, துக்காம்பாளையத்தெரு<br>கும்பகோணம் | 20000/– |
| 3 | ஏ.ஜி.பிரிண்டிங் பிரஸ்<br>57, நாகேஸ்வரன் திருமஞ்சனவீதி<br>கும்பகோணம் | 19500/– |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்த ஸ்ரீகலாநிதி பிரஸ், கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம். SDRF நிதி ஒதுக்கீட்டில் செலவினத்தை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3607 / 2020 / எச்1**

---

**23)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு COVID-19 வைரஸ் தொற்று தூய்மைப்பணிக்கு தேவையான கிருமிநாசினி பொருள் பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ.பை (வரிகள் உட்பட) |
|---|---|---|
| 1 | வி.என்.டி எண்டர்பிரைசஸ்<br>330.வடுகர் காலனி, அரைக்கம்பேடு மெயின்ரோடு<br>(Near Woman Sidco) சென்னை.62 | 76.70 |
| 2 | கிரீன் அக்ரோ எண்விரான்மெண்ட் சர்வீஸ்<br>எண்.6. L.Endathur Road, 66 தண்டலம், மதுராந்தகம் | 56.64 |
| 3 | ஈக்காடு வேளாண்மை பொறியியல்பணி<br>கூட்டுறவு மையம் லிட்.,<br>485, ரெட்கில்ஸ் ரோடு, ஈக்காடு, திருவள்ளூர் | 70.80 |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கிரீன் அக்ரோ எண்விரான் மெண்ட் சர்வீஸ், எண்.6. L.Endathur Road, 66 தண்டலம், மதுராந்தகம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.
இ. செலவினம் வருவாய்நிதியில் மேற்கொள்ளலாம்.
ஈ. உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3607 / 2020 / எச்1**

---

**24)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு தூய்மைப்பணிக்கு தேவையான கிருமிநாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் போன்றவை கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டும், தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டும் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பிளீச்சிங் பவுடர் 1 கி / ரூ. | நீர்த்த சுண்ணாம்பு 1 கி / ரூ. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீசரவணா ஹார்டுவேர்ஸ்<br>137, அருணகிரிநாதர் தெரு. குத்தாலம் | 47.50<br>+ 18% GST | 18.50<br>+ 18% GST |
| 2 | ஆர்.விஜயகுமார்<br>24, மேலத்தெரு, வடபாதி<br>வேளுக்குடி.610 102 | 89.00<br>+ 18% GST | 19.25<br>+ 18% GST |
| 3 | எஸ்.சத்தியா, சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் மெட்டீரியல் காண்ட்ராக்டர்<br>137, அருணகிரிநாதர் தெரு<br>குத்தாலம். | 88.00<br>+ 18% GST | 19.90<br>+ 18% GST |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீசரவணா ஹார்டுவேர்ஸ், 137.அருணகிரிநாதர் தெரு, குத்தாலம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்கலாம்.

ஆ. தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.

இ. செலவினம் ரூ.6,00,000/— (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 4506 / 2020 / எச்1**

---

**25)** இந்நகராட்சி பகுதியில் கொரானா வைரஸ் நோய் தொற்று ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிஷ்ணு எலக்ட்ரானிக்ஸ் மியூசிக்கல்ஸ்<br>21,நாகேஸ்வரன் தெற்கு. கும்பகோணம் | 1600/— |
| 2 | பாபு ரேடியோஸ்<br>சாரங்கபாணி தெற்கு (பெரியபள்ளிவாசல் காம்ப்ளக்ஸ்)<br>கும்பகோணம் | 1700/— |
| 3 | தூயவன் வர்த்தக ஒலிபரப்பு விளம்பரம்<br>77/44.சாரங்கபாணி கீழவீதி, உச்சிபிள்ளையார் கோவில்<br>கும்பகோணம் | 1500/— |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள தூயவன் வர்த்தக ஒலிபரப்பு விளம்பரம், 77/44.சாரங்கபாணி கீழவீதி, உச்சிபிள்ளையார் கோவில் இறக்கம், கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

ஆ. தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.

இ. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

ஈ. உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3607 / 2020 / எச்1**

---

**26)** கும்பகோணம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு குப்பைகளை தரம்பிரித்து கட்டுவதற்கு தேவையான சாக்குகள் வாங்குவதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.பை |
|---|---|---|
| 1 | விஜயலெட்சுமி டிரேடர்ஸ்<br>74/91, பழைய அரண்மனைத்தெரு,<br>கும்பகோணம் | 34.00/– |
| 2 | ஸ்ரீபாலாஜி டிரேடர்ஸ்<br>3/106.புதுத்தெரு,<br>திருப்புறம்பியம் | 34.80/– |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விஜயலெட்சுமி டிரேடர்ஸ், 74/91.பழைய அரண்மனைத்தெரு, கும்பகோணம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. அனுமதி அளிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 851 / 2020 / எச்1**

---

**27)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு, நுண்ணுயிர் திரவம் தயார் செய்ய தேவையான உரி, தவிடு, வெல்லம், தயிர் விநியோகம் செய்யும் பணிக்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் பெயர் | அளவு | விஜயலெட்சுமி டிரேடர்ஸ் கும்பகோணம் ரூ.பை | பாலாஜி டிரேடர்ஸ், திருப்புறம்பியம் ரூ.பை |
|---|---|---|---|---|
| 1 | தயிர் | 1 லிட் | 58.00 | 60.00 |
| 2 | வெல்லம் | 1 கிலோ | 63.00 | 65.00 |
| 3 | உமி | 1 கிலோ | 6.75 | 7.00 |
| 4 | தவிடு | 1 கிலோ | 18.50 | 19.00 |
| 5 | சாக்குபை (50 கிலோ) | 1 எண்ணம் | 19.75 | 21.00 |

**அலுவலக குறிப்பு** : அ. குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விஜயலெட்சுமி டிரேடர்ஸ், 74/91.பழைய அரண்மனைதெரு, கும்பகோணம் நிறுவனத்தின் குறைந்த விலைவிகித விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. அனுமதி அளிக்கலாம்.
இ. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 852 / 2020 / எச்1**

**28)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு COVID–19 வைரஸ் தொற்று தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கும் பொருட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொருட்களின் பெயர் | ஸ்ரீஹரி மெடிக்கல் ஸ்டோர் கோவை | தீபா மெடிக்கல் ஸ்டோர் ஈரோடு | சரவணன் பொறியாளர் ஒப்பந்ததாரர் கும்பகோணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | Disposable Mask 3 Layer | 19 | 18 | 15 |
| 2. | N95 Mask | 340 | 325 | 290 |
| 3. | IFP 15 Mask | 120 | 125 | 100 |
| 4. | Lizol Cleaner 1 LTR | 235 | 230 | 220 |
| 5. | Latex Glove 1 Set | 15 | 14 | 12 |
| 6. | Hand Sanitizer | 690 | 665 | 650 |
| 7. | Sodium Hypochoride Liquid | 39 | 38 | 36 |
| 8. | Hand Wash Liquid | 195 | 185 | 170 |
| 9. | P.P.E Kit | 800 | 850 | 700 |

**அலுவலக குறிப்பு :** அ) குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள பொறியாளர் என்.சரவணன் என்ஜினியரிங் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி விநியோக உத்தரவு தனிஅலுவலரின் முன் அனுமதி வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.
இ) SDRF - நிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க. எண் 4502 / 2020 / எச்1**

---

**29)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு தூய்மைப் பணிக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு பவுடர் இருப்பு குறைவாக உள்ளதால் தற்போது கொரோனா COVID–19 வைரஸ் தொற்று பெருமளவில் பரவுவதனால் கிருமிநாசினி பொருட்கள் தேவையான கையிருப்பு வைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்து பிளிச்சீங் பவுடர் 25 M/T நீர்த்த சுண்ணாம்பு 25 M/T கொள்முதல் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | பிளீச்சிங் பவுடர் விலைப்புள்ளி | நீர்த்த சுண்ணாம்பு |
|---|---|---|---|
| | | 1 கி.கி / ரூ. | 1 கி.கி /ரூ. |
| 1. | ஜி.பி. என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ்<br>1, சத்தியா நகர், T.T ரோடு,<br>உறையூர், திருச்சிராப்பள்ளி, | 53.00<br>+18% GST | 9.50<br>+5% GST |
| 2. | ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ்<br>4/10, கீழ சாராய பட்டறை தெரு,<br>உறையூர், திருச்சிராப்பள்ளி, | 68.00 | 13.00 |
| 3. | ஸ்ரீஅம்மன் ஏஜென்ஸி<br>கடை எண்.3, 1/3856/1, கோகுலம்<br>காலனி, டோல்கேட், திருச்சிராப்பள்ளி | 70.00 | 17.00 |

**அலுவலக குறிப்பு :** அ) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜி.பி என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், 1, சத்தியா நகர், T.T ரோடு, உறையூர், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ) உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சம் அனுமதி அளிக்கலாம்.
இ) செலவினம் SDRF நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க. எண் 4507 / 2020 / எச்1**

---

**30)** இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று COVID-19 பெருமளவில் பரவாமல் இருக்கும் பொருட்டு பொதுமக்கள் பெருமளவில் தொடர்ந்து வெளியில் வராமல், இருப்பதனை கட்டுப்படுத்தும் பொருட்டு மூன்று நிறங்களில் வண்ண அனுமதி அட்டை அச்சடித்து விநியோகம் செய்ய மாவட்ட ஆட்சியரால் அறிவுரை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி 39000 எண்ணிக்கை மூன்று வண்ண அனுமதி அட்டை கே.ஆர்.பிரிண்டர்ஸ் (K.R.Printers) தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. அதற்குண்டான பட்டியல் ரூ.69888/– (அறுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று என்பத்தெட்டு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :
1. அனுமதி அளிக்கலாம்.
2. செலவினம் SDRF நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3607 / 2020 / எச்1**

---

**31)** கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான 41 கணினிகள் மற்றும் 1 சர்வர் ஆகியவற்றினை 01.11.2018 முதல் ஓராண்டிற்கு பராமரிப்பு செய்யும் பணியை மெசர்ஸ்.சுமராஜ் ஐடி சொல்யூசன்ஸ், தஞ்சாவூர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு செய்தும், தற்போது பராமரிப்பு பணி மேற்கொள்ளும் மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவு தொகை ரூ.105000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 8096 / 2017 / இ3**

---

**32)** இந்நகராட்சிக்கு உட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் சோடியம் ஹைப்போ குளோரைடு சுமார் 50000 லிட்டர் கொள்முதல் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.4.75 இலட்சத்துக்கும், குடிநீர் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஆ/எ.கிருஷ்ணா கெமிக்கல்ஸ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு மேற்படி நிறுவனத்தாரின் 28.08.2019ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தில் விநியோகம் செய்ய உத்தரவிட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் திட்டநிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 8203 / 2019 / இ3**

---

**33)** இந்நகராட்சி 45 வார்டுகளில் சொத்துவரி விதிக்கப்பட்ட வீடுகளுக்கு புதை சாக்கடை இணைப்பு வழங்குவதற்கு முன்பே கேட்பு எழுப்பப்பட்டதால் இத்தொகையினை நீக்கம் செய்யக்கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் தள ஆய்வு செய்யப்பட்டு தவறாக எழுப்பப்பட்ட கேட்புத்தொகை ரூ. 68,100 /– ஐ நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வரிவிதிப்பு எண் | பெயர் | தெருவின் பெயர் | காலம் | தொகை ரூ | தள்ளுபடி செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 08 | 105/6697 | எஸ்.கற்பகவல்லி | 68எ /1179 பக்தபுரி பின்புறம் | 2009-10 II to 2012-13-III | 2550 | புதைசாக்கடை இணைப்பானது 05.09.2012ல் தான் வைப்புதொகை செலுத்தப்பட்டு இணைப்புவழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 2. | 33 | 105/30666 | வி.கிருபாகரன் | **76- 4/ 11 -1353** ஏ. ஆர்.ஆர் ராமசாமி ரோடு | 2015-16-I to 2017-18-II | 450 | புதைசாக்கடை இணைப்பானது 13.10.2017ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 3. | 26 | 105/20978 | எஸ்.நற்பவி கல்யாணி | **25**/6,ஸ்டேட்பாங்க் காலனி | 2009-10-III to 2017-18-I | 6975 | புதைசாக்கடை இணைப்பானது 25.07.2017ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 4. | 34 | 105/31975 | எஸ்.ஜோசப் | **57** செம்போடை தெரு | 2009-10-II to 2010-11-III | 1200 | புதைசாக்கடை இணைப்பானது 18.02.2011–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 5. | 24 | 105/22033 | மீரா.மகாலிங்கம் | **47**H-I /**2270**- **2** நகர் காலனி | 2009-10-II to 2013-14-I | 3450 | புதைசாக்கடை இணைப்பானது 27.09.2013–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 6. | 39 | 105/36533 | ஆர்.வத்சலா | **6** கண்மணி நகர் | 2009-10-II to 2017-18-II | 7275 | புதைசாக்கடை இணைப்பானது 13.10.2017–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 7. | 06 | 105/4448 | டி.கருப்பையா | 1 பி 2213 பிரமேஸ்டிபுர வழிநடப்பு | 2013-14-II to 2015-16-IV | 2325 | புதைசாக்கடை இணைப்பானது 27.04.2016–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 8. | 03 | 105/1907 | பி.ஹபீப் ரஹ்மான் | 96 /1581 வடக்கு குடியான தெரு | 2013-14-II to 2015-16-IV | 2325 | புதைசாக்கடை இணைப்பானது 03.05.2016–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 9. | 33 | 105/31066 | ஜெ.உமா, எம்.பாக்கியலெட்சுமி ஜெ.மணிகண்டன் | 1334/658 ஏ.ஆர். ராமசாமி ரோடு, | 2013-14-IV to 2014-15-III | 750 | புதைசாக்கடை இணைப்பானது 09.01.2015–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 10. | 39 | 105/36217 | எ.நடராஜன் | 21/1468 24வது தெரு, காடுவெட்டித் தெரு | 2009-10-II to 2016-17-II | 6375 | புதைசாக்கடை இணைப்பானது 18.10.2016–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 11. | 41 | 105/38482 | ஜி. பஞ்சாட்சர தேவி | 60 எ அழகப்பன் தெரு | 2009-10-II to 2016-17-III | 6600 | புதைசாக்கடை இணைப்பானது 04.02.2017–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 12. | 02 | 105/002/00045 | எ.அன்பழகன் | 19பி/802 ஏராகரம் வழிநடப்பு | 2013-14-II to 2015-16-IV | 2325 | புதைசாக்கடை இணைப்பானது 13.06.2016–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 13. | 16 | 105/13840 | வி.எஸ்.ஜெகன்னாதன் | 32 கம்பட்ட விஸ்வநாதர் மேல வீதி | 2010-11-III to 2015-16-II | 4500 | புதைசாக்கடை இணைப்பானது நெடுஞ்சாலை துறையின் அனுமதி 16.12.2015–ல் பெற்ற பின்புதான் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14. | 07 | 105/5276 | காமாட்சி | 57/1 திருவள்ளுவர் நகர் , டாக்டர் மூர்த்தி ரோடு, | 2009-10-II to 2017-18-II | 7275 | புதைசாக்கடை இணைப்பானது 13.10.2017–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 15. | 33 | 105/21245 | எஸ்.செல்வராஜ் | 92 எ/957 மோதிலால் தெரு, | 2013-14-IV to 2014-15-IV | 1425 | புதைசாக்கடை இணைப்பானது 18.05.2015–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 16. | 02 | 105/002/00361 | யு.ஹாஷாத்தி | 7 எஃப் / 92 ஏராகரம் வழிநடப்பு | 2010-11-III to 2017-18-III | 6375 | புதைசாக்கடை இணைப்பானது 06.02.2018–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 17. | 21 | 105/19359 | ஜி.ஜெயராமன் | 1/1015 பாணாதுறை கீழத் தெரு | 2009-10-II to 2015-16-IV | 5925 | புதைசாக்கடை இணைப்பானது 12.05.2016–ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 18. | 36 | 105/33898 | டி. சத்திய கண்ணன் | 28/980 பெரிய தெரு | புதைசாக்கடை இணைப்பிற்கான பயன்பாட்டு கட்டணமானது 2016-17-I to 2016-17-II காலத்திற்கான தொகை ரூ.450 04.04.2016ல் செலுத்தப்பட்டும் ரசீது பெறப்பட்டும் உள்ளது . இத்தொகை கணினியில் ரத்து ஆகாமால் மறுபடியும் வரப்பெற்றுள்ளதை ரத்து செய்ய ஒப்புதலுக்கு. | | |
| 19. | 35 | 105/32926 | எ.ஆர்.ஜெயசீலன் | 1 எ, ராமச்சந்திர புரம், கும்பகோணம் | தவறுதலாக வரப்பெற்றுள்ள புதைசாக்கடை வரி விதிப்பு எண்.105/32714ல் செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.3225யை சரியான வ.விதிப்பு எண்.105/32926ல் வரவு வைக்கலாம். | | |
| 20. | 35 | 105/32714 | எ.ஆர்.ஜெயசீலன் | 1 எ, ராமச்சந்திர புரம், கும்பகோணம் | புதைசாக்கடைக்கான இணைப்பு இல்லை. கேட்பினை நீக்கம் செய்யலாம். | | |
| 21. | 40 | 105/32938 | ஆர்.எஸ்.சிவக்குமார் | 43 ராமசந்திரபுரம் தெரு | புதைசாக்கடைக்கான பழைய வரிவிதிப்பு எண்ணை 105/32748 எண்ணை நீக்கம் செய்யவும், புதிய வ.விதிப்பு எண்.105/32938ல் வரிகேட்பு தொகையினை பதிவேற்றம் செய்யலாம். | | |
| 22. | 31 | 105/29495 | நூருல் அமீன் | 55–1/டி.எஸ்.எண். 138 காயிதே மில்லத் இஸ்மாயில் | புதைசாக்கடைக்கான பழைய வரிவிதிப்பு எண்ணை 105/29368 எண்ணை நீக்கம் செய்யவும், புதிய வ.விதிப்பு எண்.105/29495 வரிகேட்பு தொகையினை பதிவேற்றம் செய்யலாம். | | |
| 23. | 31 | 105/29495 | நூருல் அமீன் | 55–1/டி.எஸ்.எண். 138 காயிதே மில்லத் இஸ்மாயில் | புதைசாக்கடைக்கான பழைய வரிவிதிப்பு எண். 105/29368 ரூ.1800 செலுத்தப்பட்ட தொகையை புதிய வ.விதிப்பு எண்.105/29495 வரவு வைக்கலாம். | | |
| 24. | 40 | 105/37360 105/37362 | எம்.ஜெயராமன் | 42 நாராயணன் காலணி | புதைசாக்கடைக்கான இணைப்பு இல்லை. கேட்பினை நீக்கம் செய்யலாம். | | |
| 25 | 06 | 105/4167 | கே.வெங்கடேசன் | 2376/2, 2394/52 காலேஜ் ரோடு | புதைசாக்கடைக்கான இணைப்பு இல்லை. கேட்பினை நீக்கம் செய்யலாம். | | |
| 26 | 28 | 105/028/00315 | எஸ். சுரேஷ் | 21 டி/426 நாகேஸ்வரன் கீழ வடம்போக்கி தெரு | புதைசாக்கடைக்கான இணைப்பு இல்லை. கேட்பினை நீக்கம் செய்யலாம். | | |
| 27 | 7 | 105/007/00794 | டி.பாஸ்கரன் | 57/1077 டாக்டர் மூர்த்தி ரோடு | புதைசாக்கடை வரி கேட்பு வணிக பயன்பாட்டிலிருந்து வீட்டு பயன்பாட்டிற்கு மாற்ற செய்யலாம். | | |

**அலுவலக குறிப்பு :** பாதாள சாக்கடை கேட்பு தொகை **ரூ.68,100/–** தள்ளுபடி செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண் : 2059 / 201 7 / இ4**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**